**செய்தி வெளியீடு எண்: 598** **நாள் : 27.11.2015**

**<u>செய்திக் குறிப்பு</u>**

**ஐக்கிய அரபு குடியரசு நாட்டின் ஷார்ஜாவில்** உள்ள ஒரு முன்னணி நிறுவனத்திற்கு பி.காம் தேர்ச்சி பெற்ற கணக்காளர் மற்றும் தட்டச்சர், ஐக்கிய அரபு குடியரசின் செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் எண்.3 & 4 வைத்துள்ள ஓட்டுநர்கள், உரிமம் எண்.3&6 வைத்துள்ள பஸ் டிரைவர்கள், உரிமம் எண்.7 & 8 வைத்துள்ள போர்க்லிப்ட் & ஜேவிசி ஓட்டுநர்கள், ஐடிஐ தேர்ச்சி பெற்ற பிரெஸ் டூல் & ஷீட் மெட்டல் டை மேக்கர், ஐடிஐ மெஷின் ஷாப் பிட்டர்கள் மற்றும் ஸ்டீல் ஸ்டிரக்சுரல் பேப்ரிகேட்டர்கள் மற்றும் முன் அனுபவமுள்ள கொத்தனார்கள் - ஸ்டீல் பிக்சர்களுக்கான நேர்முகத் தேர்வு நடைபெற உள்ளது.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு தகுதி மற்றும் அனுபவத்திற்கேற்ப ஊதியத்துடன், ஐக்கிய அரபு குடியரசின் சட்டதிட்டத்திற்குட்பட்ட இதர சலுகைகளும் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பணியிடங்களுக்கான பணி விவரங்கள், அனுபவம், வயது வரம்பு, ஊதியம், மற்றும் இதர சலுகைகளை www.omcmanpower.com என்ற இந்நிறுவன வலைதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

எனவே, உரிய தகுதி மற்றும் அனுபவம் இருப்பின், தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன், கல்வி, அனுபவம், பாஸ்போர்ட் ஆகியவற்றின் இரண்டு நகல்கள், அசல் பாஸ்போர்ட் மற்றும் வெள்ளை நிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட ஐந்து புகைப்படத்துடன் ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலக வளாகம், எண்.42, ஆலந்தூர் சாலை, கிண்டி தொழிற்பேட்டை, (தீயனைப்புத்துறை நிலையம் அருகில்) சென்னை 600 032 என்ற முகவரியில் அமைந்துள்ள தமிழக அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் **5.12.2015** அன்று காலை 9.00 முதல் நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு, 044–22502267/22505886/08220634389 என்ற எண்களில் தொடர்பு கொள்ளவும்.

**நிர்வாக இயக்குநர்**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**